செ.வெ.எண் : 251/2019 நாள் : 23.03.2019

நாடாளுமன்ற தேர்தல் - 2019 தொடர்பான பயிற்சியினை நல்ல முறையில் பயன்படுத்தி சிறப்பாக பணியாற்ற, வாக்குப்பதிவு பணியில் ஈடுபடும் அலுவலர்களுக்கு
மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பிரசாந்த் மு.வடநேரே இ.ஆ.ப., அவர்கள் வேண்டுகோள்

நாடாளுமன்ற தேர்தல் - 2019 - ஐ முன்னிட்டு, மார்த்தாண்டம் நேசமணி நினைவு கிறிஸ்தவ கல்லூரி, கருங்கல் பெத்தலகேம் சி.பி.எஸ்.இ. மேல்நிலைப்பள்ளி, மணவாளக்குறிச்சி பாபுஜி மேல்நிலைப்பள்ளி, தக்கலை அமலா கான்வெண்ட் மகளிர் மேல்நிலைப்பள்ளி, நாகர்கோவில் இந்து கல்லூரி மற்றும் கோணம் அரசினர் தொழில்நுட்ப கல்லூரி ஆகிய இடங்களில் இன்று (23.03.2019) நடைபெற்ற வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் உள்ளிட்ட அலுவலர்களுக்கான முதற்கட்ட தேர்தல் பயிற்சி வகுப்பினை, மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பிரசாந்த் மு.வடநேரே இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டார்கள்.

இப்பயிற்சி வகுப்பில் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசியதாவது : -

வருகின்ற நாடாளுமன்ற தேர்தல் - 2019, வாக்குப்பதிவு நாளான ஏப்ரல் 18-ஆம் தேதியன்று நமது மாவட்டத்தில் தேர்தல் வாக்குப்பதிவு பணியினை மேற்கொள்ளும் நீங்கள் வாக்குப்பதிவு நாளில் தேர்தல் விதிமுறைகளை பின்பற்றி எவ்வாறு பணியாற்ற வேண்டும் என்பதை குறித்தும், ஒவ்வொரு அலுவலர்களும் மேற்கொள்ளும் பணிகள் குறித்தும், மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தினை கையாள்வது குறித்தும், VVPAT கருவியின் செயல்பாடுகள் குறித்த பயிற்சி வகுப்புகள் வழங்கப்படும். இப்பயிற்சி வகுப்பினை 8,132 வாக்குச்சாவடி நிலை அலுவலர்களும் நல்ல முறையில் பயன்படுத்தி, சிறப்பாக பணியாற்ற வேண்டும். இவ்வாறு மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசினார்கள்.

நடைபெற்ற முதற்கட்ட தேர்தல் பயிற்சி வகுப்புகளில், மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.இரா.ரேவதி, சார் ஆட்சியர் (பத்மநாபபுரம்) திருமதி.ஷரண்யா அறி, உதவி ஆணையர் (கலால்) திரு.ம.சங்கரலிங்கம், தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்பு திட்டம்) திருமதி.ஜெயராணி, மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் திரு.எஸ்.கிறிஸ்டோபர் ஜெயராஜ்,மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி) திரு.பத்ஹூ முகம்மது நசீர், வட்டாட்சியர்கள் திரு.சுப்பிரமணியன் (திருவட்டார்), திரு.கோலப்பன் (கிள்ளியூர்), திரு.ராஜாசிங் (கல்குளம்) உள்ளிட்ட அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---